தேதி **- 03.11.2023**

அசல் வழக்கு எண்.**148/2010**

வா.சா. **2 - N.**சந்திரன்

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிராமணத்தின் பேரில் முதல்விசாரணை தொடர்ச்சி

எனது கூடுதல் பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். 18.08.1996 ல் 5 ம் வாதியான சந்திரசேகரன் மற்றும் 2 ம்வாதியான சாந்திக்கும் திருமணம் நடைபெற்றதற்கான திருமண அழைப்பதிழ் வா.சா.ஆ.**52**.

19.10.1997 ல் 5 ம் வாதியான சந்திரசேகரனுக்கும், 2 ம் வாதியான சாந்திக்கும் பிறந்த குழந்தையான விமல் என்பவரின் பிறப்புச்சான்று நகல் வா.சா.ஆ.**53** ஆகும்.

23.01.1994 ல் 2 ம் வாதியான சாந்திக்கும், N.ஆறுமுகம் என்பவருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ.**54** ஆகும்.

1 ம் வாதியான முத்துலெட்சுமி என்பவர் தாவா 8 ம் லக்க சொத்தை பொறுத்து பட்டாமாறுதல் செய்யக் கூடாது என்று மதுரை மேற்கு தாலுகா வட்டாட்சியர் அவர்களுக்கு 24.07.2021 ம் தேதியன்று பதிவுதபால் மூலம் அனுப்பிய அறிவிப்பு (ஜெராக்ஸ் நகல்) மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை நகல் வா.சா.ஆ.**55 (**வரிசை**)** ஆகும்.

10.01.2022 ல் 1 ம் வாதியான முத்துலெட்சமி தாவா வழக்கிலுள்ள 8 வதுலக்கச் சொத்தை பட்டா மாறுதல் செய்யக் கூடாது என்று மீண்டும் நினைவூட்டல் மதுரை மேற்கு வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு (அலுவலக நகல்) மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.**56 (**வரிசை**)** ஆகும்.

06.02.2023 ம் தேதி வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிந்தும் தாவா வழக்கிலுள்ள 8 வது லக்கச் சொத்தை 28 ம் பிரதிவாதியான முத்துராமலிங்கத்துக்கு 21.03.2022 ம் தேதியன்று பட்டா மாறுதல் செய்யப்பட்டதற்கான கணினி பட்டா வா.சா.ஆ.**57** ஆகும்.

10.02.2022 ம் தேதி தாவா 8 வது லக்கச் சொத்தை வசந்தம் ஸ்டோர்ஸ்

உரிமையாளருக்கு 1,2 வாதிகளான முத்துலட்சுமி, சாந்தி தரைவாடகைக்கு விடக் கூடாது என்று வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா**.**சா**.**ஆ**.58** ஆகும்.

14.12.2022 ம் தேதியன்று தாவா 8 வது லக்கச் சொத்தை பட்டா மாறுதல் ரத்து செய்ய 1 ம் வாதியான முத்துலெட்சுமி மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.59 (**வரிசை**)** ஆகும்.

18.01.2023 ம் தேதி மதுரை வருவாய் கோட்டாட்சியர் 1 ம் வாதியான முத்துலெட்சுமிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.60** ஆகும்.

07.10.2023 ம் தேதி தாவா 6, 7 லக்கச் சொத்துக்களை 29 ம் பிரதிவாதியான செல்லமணி வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிந்து கொண்டு கிரையம் வாங்கியது செல்லாது என்றும் மற்றும் அதை இரத்து செய்ய மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு 1 ம் வாதி முத்துலட்சுமி மூலம் அனுப்பிய அறிவிப்பு (அலுவலக நகல்) மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.61 (**வரிசை**)** ஆகும்.

தாவா 6 ம் லக்கச் சொத்தை பொறுத்து 06.09.2022 ம் தேதி மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு 1 ம் வாதியான முத்துலெட்சுமிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.62** ஆகும்.

18.10.2021 ம் தேதி தாவா 6 ம் லக்கச் சொத்தை பொறுத்து வரிவிதிப்பை ஆறுமுகம்பிள்ளை பெயருக்கு மாற்ற உதவி ஆணையாளர் அவர்களுக்கு 1 ம் வாதியான முத்துலெட்சுமி அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.63 (**வரிசை**)** ஆகும்.

18.10.2021 ம் தேதி தாவா 7 ம் லக்கச் சொத்தை பொறுத்து வரிவிதிப்பை ஆறுமுகம்பிள்ளை பெயருக்கு மாற்ற உதவி ஆணையாளர் அவர்களுக்கு 1 ம் வாதியான முத்துலெட்சுமி அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.64 (**வரிசை**)** ஆகும்.

10.03.2022 ம் தேதி தாவா வழக்கிலுள்ள 6, 7 லக்ச்ச சொத்துக்களை பொறுத்து 1 ம் வாதியான முத்துலட்சுமிக்கு உதவி ஆணையாளர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.65** ஆகும்.

18.08.1996 ம் தேதி 5 ம் வாதி சந்திரசேகரனுக்கும், 2 ம் வாதியான சாந்திக்கும் திருமணம் நடைபெற்றதற்கான புகைப்படங்கள் வா**.**சா**.**ஆ**.66 (**எண்ணிக்கையில் **16)** ஆகும்.

ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.